28.09.2017

சுற்றறிக்கை இலக்கம் : 2017/**04**

மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

கிராம அபிவிருத்தி திணைக்களம்

வடக்கு மாகாணம்.

## கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களினை ஒழுங்குபடுத்தி நிறுவன மயப்படுத்தல்

1. கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் கிராமிய பொருளாதார மேம்பாட்டிற்கு அடித்தளமாக அமைவதனூடே மொத்த தேசிய உற்பத்திக்கும் பங்களிப்பு செய்யும் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களாக செயற்படுவதினை உறுதி செய்தல் வேண்டும்.
2. **வெளிப்படைத் தன்மை, நல்லாட்சி, கணக்களி தகைமை** ஆகியவற்றை நிலைநிறுத்தக் கூடிய வகையில் கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களினை ஒழங்குபடுத்தி அவற்றினை நிறுவன மயப்படுத்தல் அவசியமான தொன்றாகின்றது.
3. இதனை நடைமுறைப்படுத்துமுகமாக சங்கங்கள் மீதான பின்வரும் செயற்பாடுகளை அமுல்படுத்தல் இச்சுற்றறிக்கை மூலம் வலியுறுத்தப்படுகின்றது.
   (i) **சகல கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்து இயங்குதல் வேண்டும்.** தொடர்ச்சியாக நிர்வாகக் கூட்டங்களோ, பொதுக் கூட்டங்களோ இடம்பெறாமல் எந்தவித இயக்கமுமின்றி தொடர்ந்து ஒரு வருடத்திற்கு மேல் காணப்படும் சங்கங்களின் பதிவு தற்காலிகமாக ஒரு மாதத்திற்கு இடைநிறுத்தப்படுவதுடன் ஒரு மாத காலத்திற்குள் நியாயமான காரணங்களுடன் மீள் விண்ணப்பங்கள் செய்கின்ற பொழுது பணிப்பாளர், கிராம அபிவிருத்தி திணைக்களம், அவர்களின் தீர்மானத்திற்கு அமைய பதிவு இரத்து செய்யப்படுவதா அல்லது இல்லையா என்பது தீர்மானிக்கப்படும்.
   (ii) இரண்டு வருடங்களிற்கு ஒரு தடவை நிர்வாகம் புதுப்பிக்கப்படல் இன்றியமையாதது. உரிய காலத்தில் நிருவாக மாற்றத்தின் பொதுக்கூட்டத்திற்கு கோரமில்லை என்று அவதானிக்குமிடத்து. ஏழு (7) நாள் அவகாசத்துடன் மீண்டும் பொதுக்கூட்ட அழைப்பு வழங்கப்படல் வேண்டும். இரு சந்தர்ப்பங்களிலும் கோரமின்மை காணப்படின் அச்சங்கத்தின் இயங்குநிலை தற்காலிகமாக ஒரு மாதத்திற்கு இடைநிறுத்தப்படும். இக்காலப்பகுதியினுள் நிர்வாகம் புதிப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளாவிடின் சங்கம் நிரந்தரமாக இடைநிறுத்தப்படும்.

(iii) ஒவ்வொரு கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களும் தங்களின் நிர்வாக தெரிவிற்கு முன்பு தங்கள் அங்கதவர்களை உறுதி செய்வது தொடர்பில் சந்தா செலுத்திய அங்கத்தவர்கள் பட்டியல் வெளியிட்டு அவர்களை மாத்திரமே **நிர்வாக தெரிவிற்கான ஆகக்குறைந்த நடப்பெண் கணிப்பீடு** செய்வதற்கு கவனத்திலெடுத்தல் வேண்டும்

(iv) சங்கங்களின் அங்கத்தவர்கள் யாவரும் சந்தாவினை உரிய காலப்பகுதிக்குள் செலுத்துதல் வேண்டும். தவறின் உறுப்புரிமையை இழப்பதுடன் நிர்வாகத் தெரிவிற்கு வாக்களிப்பதற்கான தகுதியையும் இழப்பர்.

(v) சங்கங்களிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறும் போது முன்னைய நிர்வாகத்தினுடைய பயன்பாட்டில் இருந்த **சகல அசையும், அசையாச் சொத்துக்களும், ஆவணங்களும், கடிதத் தலைப்பு மற்றும் இறப்பர் முத்திரை** ஆகியன உடன் பெறப்பட்டு புதிய நிர்வாகத்தினரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படல் வேண்டும்.

(vi) சங்கங்களின் கடிதத் தலைப்பு உரிய முறையில் அச்சிடப்பட்டே பயன்படுத்தப்பட வேண்டும். **நிழற்பிரதி எடுத்தோ அல்லது கணனியில் பிரதி எடுத்தோ பயன்படுத்தப்படுவது முற்றாகத் தடை செய்யப்படுகிறது** என்பதுடன் கடித தலைப்பில் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பெயர்கள் அச்சிடப்படாது எழுதுவதற்கு ஏதுவாக இடைவெளி விடப்படுதலும் வேண்டும்.

(vii) சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் சங்கத்திற்கான பதவி முத்திரையை ஒன்றிணைந்த வகையில் அமைத்து பயன்படுத்தல் வேண்டும். தனித்தனி பதவி முத்திரைகள் பயன்படுத்தலாகாது.

(viii) ஒவ்வொரு சங்கத்திலும் யாப்பில் குறிப்பிடப்பட்ட கோவைகளிற்கு மேலதிகமாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினது கண்காணிப்பிற்கு ஏதுவாக பின்வரும் கோவைகளும் கட்டாயமாக பேணப்படுதல் வேண்டும்.

1. ஒப்பந்தம் தொடர்பான கோவை.
2. சுழற்சிமுறை கடன் தொடர்பான கோவை.
3. அங்கத்தவர்கள் தொடர்பான கோவை.
4. கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பான கோவை.
5. சங்கத்தின் பதிவுச் சான்றிதழ் தொடர்பான கோவை.
6. சங்கத்தின் கடந்த கால வரலாறு தொடர்பான கோவை.
7. சம்பவத்திரட்டு தொடர்பான கோவை.
8. சங்க யாப்பு உப விதி மற்றும் திணைக்கள சுற்றுநிருபம் தொடர்பான கோவை.

(ix) இச்சுற்றுநிருபத்தின் செயற்பாடுகள் பின்பற்றாத சங்கங்கள் காணப்படுமிடத்து அவை நிறுவன மயமாக்கலிற்கு உட்படுத்தப்பட முடியாதென்ற. என்ற நிலைமையினை கருத்திற் கொண்டு அவற்றின் பதிவினை இரத்து செய்வது தொடர்பான தீர்மானத்தினை எடுப்பதற்கான அதிகாரம் திணைக்களப் பணிப்பாளருக்கு உண்டு.

(x) பதிவு இரத்து செய்யப்பட்ட சங்கங்களின் விபரங்கள் பிரதேச செயலகங்களில் பிரசுரிக்கப்படும். இச்சங்கங்கள் எந்தவிதமான நிருவாக செயற்பாடுகளிலும் ஈடுபடமுடியாது. அத்துடன் இவற்றின் சொத்துக்கள் யாவும் மீளப்பெறப்பட்டு தேவைப்படுகிற இயங்கிக் கொண்டிருக்கும் சங்கங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அவை நிறுவனமயப்படுத்தலிற்கு வழிசமைக்கப்படும்.

மேற்குறித்த விடயங்களை சங்கங்களிற்கு தெரியப்படுத்தி, தெளிவுபடுத்தி நடைமுறைப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஜே.ஜே.சி.பெலிசியன்
பணிப்பாளர்
கிராம அபிவிருத்தி
வடக்கு மாகாணம்

ஜே.ஜே.சி.பெலிசியன்,
பணிப்பாளர்,
கிராம அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

பிரதிகள் :-

1. பிரதம செயலாளர், வடக்கு மாகாணம். - **தயவுடன் தகவலுக்காக.**
2. செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு,வடக்கு மாகாணம் - **தயவுடன் தகவலுக்காக.**
3. அரசாங்க அதிபர்……… …………. - **தயவுடன் தகவலுக்காக**
4. .உதவி கணக்காய்வாளர் நாயகம், வட பிராந்தியம் . **தயவுடன் தகவலுக்காக.**
5. பிரதம உள்ளக கணக்காய்வாளர் வடக்குமாகாணம். - **தயவுடன் தகவலுக்காக.**

இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෛප්පන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna
பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail nprural@gmail.com

6. பிரதேச செயலாளர்.................................... - தயவுடன் தகவலுக்காகவும், வழிநடாத்துவதற்காகவும்.
7. பிரதேச மட்ட சங்கங்களும்,சமாசமும் மாவட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்க இணையமும் - தகவலுக்காகவும், செயற்படுவதற்காகவும்.